2017 மார்ச் 21]

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

52—

மின் உற்பத்தி

***798—திரு. அர. சக்கரபாணி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒட்டன்சத்திரம் நகராட்சி, காந்தி காய்கறி சந்தையிலுள்ள காய்கறிக் கழிவுகளிலிருந்து மின் உற்பத்தி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள் கேட்டிருக்கின்ற கேள்வியானது நகராட்சித் துறை சம்பந்தப்பட்ட கேள்வி. இருந்தாலும், காய்கறிக் கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்க வேண்டுமென்று மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவருடைய நகராட்சியில் அதுபோன்று மின்சாரம் தயாரிப்பதற்கு ஏற்பாடு செய்தால், மின்சார வாரியத்தில் அதை வாங்குவதற்குத் தயாராக இருக்கின்றோம். அதற்கான ஏற்பாடுகளைச் செய்வது குறித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் துணைக் கேள்விக்கு மாண்புமிகு நகராட்சித் துறை அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது சொல்வார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே மிகப்பெரிய காய்கறி மார்க்கெட்*

ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்தான். திண்டுக்கல் மாவட்டத்திலிருந்து மட்டுமல்லாமல், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், பிற மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகா, குஜராத், மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களிலிருந்துகூட விவசாயிகள் தினந்தோறும் காய்கறிகளைக் கொண்டு வருகிறார்கள். அந்தக் காய்கறி மார்க்கெட்டிலே தினந்தோறும் குறைந்தது 10 டன் முதல் 18 டன் காய்கறிக் கழிவுகள் ஏற்படுகின்றன. அந்தக் கழிவுகளைக் கொட்டுவதற்கு அங்கே இடமில்லை. சாலை ஓரத்திலே கொட்டிவிடுகிறார்கள். அது காய்ந்த பின்பு அதிலே தீ வைத்துவிடுகிறார்கள். அதனால் அந்தப் பகுதியே புகைமண்டலமாக மாறி, சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது. தமிழகத்திலே, 32 இடங்களில் நகராட்சிகளின் மூலமாக bio–gas–லிருந்து மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. அதாவது, 5 மெட்ரிக் டன் கழிவுகள் இருந்தாலே, 250 முதல் 300 யூனிட்கள் வரை மின்சாரம் தயாரிக்கலாம். கோயம்பேட்டிலேகூட 300 டன் கழிவுகள் வருகின்றன. அவற்றிலிருந்து மின்சாரம் தயாரிப்பதாக நான் கேள்விப்பட்டேன். ஒட்டன்சத்திரத்தைப் பொறுத்தவரையில், 18 டன் காய்கறிக் கழிவுகள் வருகின்றன. இது நகராட்சித் துறை சம்பந்தப்பட்ட கேள்வி என்று மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கு போதுமான இடம் இல்லை. இடம் வாங்குவதற்கு நகராட்சியிலே பணம் இல்லை. ஏனென்றால், அங்கு நில மதிப்பு கூடுதலாக இருக்கிறது. மாண்புமிகு நகராட்சித் துறை அமைச்சர் அவர்கள் காய்கறிக் கழிவுகளிலிருந்து மின்சாரம் எடுக்கின்ற திட்டத்தைக் கொண்டு வருவதற்கும், கழிவுகளைக் கொட்டி வைப்பதற்கான இடத்தைக் கையகப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சியில் பணம் இல்லாததால், சிறப்பு நிதி ஒதுக்கி, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக நிலத்தைக் கையகப்படுத்தி, மின்சாரம் தயாரிக்கின்ற திட்டத்தை ஒட்டன்சத்திரத்திலே கொண்டு வருவதற்கு மாண்புமிகு நகராட்சித் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களே பதில் சொன்னாலும்சரி அல்லது மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களே பதில் சொன்னாலும்சரி, யார் பதில் சொன்னாலும்சரி.

2017 மார்ச் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களைத்தான் கேட்டீர்கள். அவரே பதில் சொல்லட்டும். முன்னரே அவரிடம் சொல்லிவிட்டேன்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள் காய்கறிக் கழிவுகளிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் பரிசீலனையில் இந்தத் திட்டம் இல்லையென்றாலும்கூட, இடத்தைப் பொறுத்தவரைக்கும், கழிவுகளை, குப்பைகளைக் கொட்டுவதற்கு இடம் தேர்வு செய்யும்பொழுது, அரசு நிதி கொடுத்தாலும்கூட, அங்கு இருக்கக்கூடிய சூழ்நிலையெல்லாம் கொறடா அவர்களுக்கே நன்றாகத் தெரியும். பொதுமக்களுடைய அதிருப்தி மட்டுமல்லாமல், வேறுமாதிரியான சூழ்நிலைகளெல்லாம் அங்கு ஏற்படுகின்றன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கண்டிப்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை பரிசீலனை செய்யும்.

அதைப்போல, இடம் தேர்வு செய்து, திட்ட மதிப்பீடு எவ்வளவு வருகிறது என்று பார்க்க வேண்டும். அதிகமான காய்கறிகள் வருவதால், ஒட்டன்சத்திரம் மார்க்கெட் மிகவும் பிரசித்திபெற்றது என்பது எல்லோருக்கும் தெரியும்—கழிவுகள் வருவதைப்பொறுத்தும், பல நகராட்சிகள், மாநகராட்சிகளிளெல்லாம் இருக்கின்றன. இப்பொழுது மூன்று இடங்களில் சிறப்பாக bio–gas தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

அதைப்போல, பல கம்பெனிகள் வந்தாலும்கூட, bio–gas தயாரிப்பது மற்றும் உரம் தயாரிப்பது போன்றவையெல்லாம் பெரிய அளவில் வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றன. மின்சாரம் தயாரிப்பது என்பது, வருகின்ற கழிவுகளைப் பொறுத்துதான் அமையும். ஒட்டன்சத்திரத்தைப் பொறுத்தவரையில் நல்ல சூழ்நிலை இருக்கிறது என்று எதிர்க்கட்சி கொறடா அவர்கள் சொல்கிறார்கள். இது அனைவருக்கும் தெரிந்த விஷயம்தான். அதற்கான இடம் தேர்வு செய்வதிலே கண்டிப்பாக அம்மா அவர்களுடைய அரசு ஒத்துழைப்பு கொடுக்கும். நீங்களும் அதற்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். வேறுமாதிரியான அரசியல் சூழ்நிலைகள் ஏற்பட்டு, இந்த இடத்தில் குப்பை கொட்டக்கூடாது என்று எதிர்ப்பு தெரிவிக்கின்ற சூழ்நிலைகள் வராதவண்ணம்

மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் ஒத்துழைப்பு தர வேண்டும் என கேட்டுக்கொண்டு, நிச்சயமாக அம்மா அவர்களுடைய அரசு அதனைப் பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், அரசு பரிசீலிக்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார் அல்லவா? பிறகு என்ன?

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுகிறேன். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, நிலம்தான் மிகவும் முக்கியம். தேவையான நிலம் வாங்குவதற்கு நகராட்சியில் போதுமான நிதி இல்லை. நிலம் கையகப்படுத்துகின்ற பணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக நீங்கள் சிறப்பு நிதி ஒதுக்கினால், கண்டிப்பாக நானே முன்னின்று எத்தனை ஏக்கர் நிலம் தேவைப்படுகிறதோ அந்த நிலத்தை வாங்குவதற்கு ஒத்துழைப்பு தருவேன். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள் ஏனென்றால், காய்கறி கழிவுகள் பெரிய பிரச்சினையாக இருக்கின்றன. அந்தக் காய்கறிக் கழிவுகளைக் கொண்டுபோய் கொட்டுவதற்கு இடம் இல்லாமலிருக்கிறது. அவ்வளவு கழிவுகளையும் கொட்ட முடியாமல் மிகவும் சிரமமாக இருக்கிறது. அந்தக் காய்கறிக் கழிவுகளிலிருந்து குறைந்தது 1,000 யூனிட்கள் மின்சாரம் தயாரிக்கலாம். அங்கு காய்கறி wastage–ஐ தினந்தோறும் அவர்கள் ரோட்டிலேதான் கொட்டிக்கொண்டு இருக்கிறார்கள். அந்தக் காய்கறிக் கழிவுகளை அப்புறப்படுத்த நகராட்சியில் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் அந்தக் குப்பைகளைக் கொட்டுவதற்கான இடத்தைக் கையகப்படுத்த, பணம் கொடுத்து நிலம் வாங்க, சிறப்பு நிதியொதுக்க ஆவன செய்யவேண்டும்.

முற்பகல் 10–15

அதேபோல, அங்கு மின்சார உற்பத்தியைத் தொடங்குவதற்கு, வருகின்ற காலங்களில் முயற்சி எடுக்க முன்வருவார்களா

2017 மார்ச் 21]

என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். பதில் இருக்கிறதா? இந்தக் கேள்விக்கு முன்பே பதில் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு, மாவட்ட அமைச்சரான நம்முடைய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி,* Detailed Project Report *தயாரிக்கவும், இருக்கின்ற சூழ்நிலையைப் பொறுத்து, ஒட்டன்சத்திரத்தில் எவ்வளவு காய்கறிக் கழிவுகள் கிடைக்கின்றன, எப்படிச் செய்யலாம் என்பதை ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கண்டிப்பாக அதை பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நீதிபதி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

53—

புதிய குடிநீர்த் திட்டம்

***2371—திரு. பா. நீதிபதி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நகராட்சியில் புதிய குடிநீர்த் திட்டத்திற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*